# தமிழ்மொழியும் இலக்கியமும்




## தரம் 11

## அழைப்பிதழ்





**Mrs.Navamany Rajakumar**
**J/Kondavil RamakirushnaMahavidyalayam**


# அழைப்பிதழ் எழுதுவோம்

- விழாக்கள், நிகழ்வுகள் முதலியவற்றில் பங்குபற்ற வருமாறு விருந்தினர்களை அழைத்து அழைப்பிதழ்களை எழுதி அனுப்பி வருகின்றோம்.
- திருமணம் முதலிய குடும்பம் சார்ந்த நிகழ்வுகளுக்கும், பாடசாலை விளையாட்டுப்போட்டி முதலிய நிறுவனம் சார்ந்த நிகழ்வுகளுக்கும் அழைப்பிதழ்களை அனுப்புகின்றோம்.
- இவ்வாறு அழைப்பிதழ்கள் பல வகைகளில் எழுதப்பட்டும் அனுப்பப்பட்டும் வருகின்றன.

# அழைப்பிதழ் ஒன்றை எழுதும் போது அவதானிக்க வேண்டியவை

- குறித்த விடயம் தொடர்பான தலைப்பு
- நிகழ்விடம்
- காலம், திகதி, நேரம்
- விளிப்பு (திரு,திருமதி,செல்வி,வணக்கத்திற்குரிய முதலான அடைமொழிகள்)
- விடயம்(சுருக்கமாக அமைய வேண்டும்)
- அழைப்பவர் அல்லது அழைக்கும் நிறுவனம்
- பண்பான வார்த்தைப் பிரயோகம்
- கவரக்கூடிய வகையில் அழகாக வடிவமைத்தல்

# அழைப்பிதழ் மாதிரிகள்


புதுமனைப் புகுவிழா அழைப்பு

திரு / திருமதி / செல்வி ........................................ அவர்களுக்கு

அன்புடையீர்;

நிகழும் துன்முகி வருடம் வைகாசித் திங்கள் 05 ஆம் நாள் (19.05.2016) வியாழக்கிழமை மு.ப 10.05 மணிமுதல் மு.ப 11.40 வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

இல, 146, வைத்திலிங்கம் வீதி, பரந்தன்


எனும் முகவரியில் அமையப்பெற்றுள்ள "வசந்த பவனம்" என்ற எமது புதிய மனையில் குடிபுகத் திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து சிறப்பிப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

நன்றி

தங்கள் நல்வரவை நாடும்

01.05.2016

திரு.நா.சிவப்பிரகாசம் குடும்பத்தினர்






# செயற்பாடுகள்

- பின்வரும் நிகழ்வுகளுக்குரிய அழைப்பிதழ்களைத் தயாரிக்குக

- பாடசாலை வருடாந்த மெய்வல்லுநர் போட்டி அழைப்பிதழ்
- நூல் வெளியீட்டு விழாஅழைப்பிதழ்
- பரிசளிப்பு விழா அழைப்பிதழ்
- திருமண அழைப்பிதழ்
- பிறந்தநாள் அழைப்பிதழ்

# 1. விளையாட்டுப்போட்டி

## வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறன்காண்போட்டி 2021


### யா/கோண்டாவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலயம்

- காலம்: 12.01.2021
- நேரம்: பி.ப 1.00 மணி
- தலைவர்: வித்தியாலயமுதல்வர்
- பிரதமஅதிதி: திரு.ச.சுசீந்தராசா(நாட்டுப்பற்றாளர்)
- சிறப்புவிருந்தினர்கள்
  - உதவிக் கல்விப்பணிப்பாளர்கள்
  - அயற்பாடசாலைஅதிபர்கள்
  - ஓய்வுநிலை ஆசிரியர்கள்
- நிகழ்ச்சிகள்
  - விருந்தினர் அழைப்பு
  - மங்கலவிளக்கேற்றல்
  - இறைவணக்கம்
  - கொடிகள் ஏற்றல்
  - கீதங்கள் இசைத்தல்
  - அணிவகுப்புமரியாதை
  - ஒலிம்பிக்தீபம் ஏற்றல்
  - சத்தியப்பிரமாணம்
  - விளையாட்டுக்கள்
  - பரிசில்வழங்கல்
  - அதிபர்உரை
  - அதிதிகள் உரை
  - வெற்றிக்கேடயங்கள் வழங்கல்
  - நன்றியுரை
  - பாசாலைக்கீதம்
- அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலைச்சமூகத்தினர்

03.01.2021 யா/கோண்டாவில்இ.ம.வி

# 2. நூல்வெளியீட்டுவிழா



நூல் வெளியீட்டு விழா

ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர்
திரு. அரியரத்தினம் அவர்கள் எழுதிய
இரண்டு நூல்கள் வெளியீட்டு நிகழ்வு

1. சந்நிதியான் அற்புதங்கள் பாகம் ஒன்பது
2. சாதனைக்கு வித்திட்ட மண் (ஆழிக்குமரன் ஆனந்தன் பற்றியது)

இடம் : கேட்போர் கூடம் நவீனசந்தை (மரக்கறிச் சந்தை மேல்மாடி)
காலம் : 24.05.2019 வெள்ளிக்கிழமை
நேரம் : மாலை 4.30 மணி

தலைமை

Capt. என். விநாயகமூர்த்தி
(இணைத்தலைவர், வல்லை மாலுமிகள் சங்கம்)

வெளியீட்டுரைகள்

திரு. ந. சிவரட்ணம்
(ஓய்வுநிலை வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி)
திரு. வி. சுமதீஸ்வரன்
(உளவளத்துறை மற்றும் சட்டக்கல்விப் பயிற்றுவிப்பாளர்)

நிகழ்ச்சிநிரல்

01. மங்கள விளக்கேற்றல்
02. இறைவணக்கம்
03. ஆசியுரை
04. வரவேற்புரை
05. சாதனையாளர் கௌரவிப்பு
06. வெளியீட்டுரை
07. ஏற்புரை

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

ஏற்பாட்டுக்குழு.
வல்வை மாலுமிகள் சங்கம்.

Guru Printers, Thirunelvely.

# 3. பரிசளிப்புவிழா



யா/ யாழ்ற்ரன் கல்லூரி,
காரைநகர்

பரிசளிப்பு விழா – 2013

காலம் : 2013–10–16 புதன்கிழமை
நேரம் : முற்பகல் 9.00 மணி
இடம் : கல்லூரிப் பிரார்த்தனை மண்டபம்

தலைவர்
திரு.வே.முருகமூர்த்தி அவர்கள் (B.Sc, Dip in Edu, S.L.P.S-I)
(கல்லூரி அதிபர்)

பிரதம விருந்தினர்
பேராசிரியர் S.V.பரமேஸ்வரன் அவர்கள் M.Sc., PhD
(முன்னாள் மருத்துவ பீடாதிபதி, யாழ் பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்
திரு.அ.அகிலதாஸ் அவர்கள் (B.A., Dip.in Edu., M.Ed)
(பிரதிக்கல்விப் பணிப்பாளர், தீவகக் கல்வி வலயம்)

கௌரவ விருந்தினர்
திரு.தி. ஏகாம்பரநாதன் அவர்கள்
(உதவி முகாமையாளர்,
பொறியியல் பகுதி, இ.போ.ச., கோண்டாவில்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

யா/யாழ்ற்ரன் கல்லூரி,
காரைநகர். 2013–10–07

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்

ANDRA DIGITAL PRINTERS T.P : 021 222 8929

# 3. திருமணஅழைப்பிதழ்


ஸ்ரீ கரியகாளியம்மன் துணை
உ
ஸ்ரீ முருகன் துணை
ஸ்ரீ செல்வநாயகியம்மன் துணை

திருமண வரவேற்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விகாரி வருடம் மாசி மாதம் 13-ம் நாள் (25.02.2020) செவ்வாய்கிழமை சுபயோக சுபதினத்தில்
மாலை 6.00 மணிக்குமேல் 9.00 மணிவரை

கோவை, திருமலையம்பாளையம், மேற்குத்தோட்டம்
தெய்வத்திருவாளர்கள். K. பழனிசாமிக்கவுண்டர் – P. பச்சியம்மாள்
ஆசியோரது மகன் வழிப்பேரனும், பாப்பம்பட்டி
தெய்வத்திரு. R. சுந்திரமூர்த்திக்கவுண்டர் – திருமதி. S. சகுந்தலா
ஆசியோரது மகள் வழிப்பேரனும்,
திரு. P. ராமலிங்கம் – திருமதி. R. விமலா
ஆசியோரது குமாரனுமான
பயிரகுலச் செல்வன்

R. அருண் B.Tech.,

தெக்கலூர், வெங்கக்கல்பாளையம், மோளதோட்டம்
தெய்வத்திரு. M. கருப்பகவுண்டர் – திருமதி. K. சுப்பாத்தாள்
ஆசியோரது மகன் வழிப்பேத்தியும், கோவை, சுண்டக்காமுத்தூர்
தெய்வத்திரு. S.A. ராமசாமிக்கவுண்டர் – திருமதி. R. ராமாத்தாள்
ஆசியோரது மகள் வழிப்பேத்தியும்,
திளைவில் வாழும் திரு. K. பூபதி – திருமதி. B. சாந்தாமணி
ஆசியோரது குமாரத்தியுமான
கிரன்குலச் செல்வி

B. சந்தியா M.E.,

ஆசியோரது திருமண வரவேற்பு விழா சோமனூர் – கருமத்தம்பட்டி சாலையில் அமைந்துள்ள, **கொங்கு வேளாளர் கலையரங்கத்தில்** நடைபெற உள்ளதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள,

சாந்தாமணி பூபதி
தாய்மாமன்
R. சண்முகம் B.Com.,
தம்பி.
J. லோகேஷ்வரன் B.E.
வெங்கல்பாளையம், தெக்கலூர்.
95788 96066
98422 64233

P. ராமலிங்கம்
R. விமலா
மச்சான் – அக்கா
R. தியாகராஜன் M.C.A., – R. வித்யா M.Sc.,
மாப்டேர். T. கவின்ஆதர்ஷ், T. யுவன்
மேற்கு தோட்டம், திருமலையம்பாளையம்.
99943 80274
94866 40374

(இரு இல்ல இனிய அழைப்பு)

# 4. பிறந்தநாள் அழைப்பிதழ்




அரசினர் திருவள்ளுவர் மேல்நிலைப்பள்ளி
முப்பெரும் விழா அழைப்பிதழ்

நன்றி


அரசினர் திருவள்ளுவர் மேல்நிலைப்பள்ளி
முப்பெரும் விழா அழைப்பிதழ்